த. நா.ச.பே. எண் : 007 நாள் : 09.07.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (9.7.2019) சட்டப்பேரவையில், கடல் அலையில் சிக்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி வேண்டி குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களின் கோரிக்கை மனு தொடர்பாக ஆற்றிய உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், லெட்சுமிபுரம் கிராமம், மண்டைக்காடு புதூர் என்னுமிடத்தில் 16.6.2019 அன்று புதூரைச் சேர்ந்த சிறுவர்கள் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கடல் அலையில் சிக்கி திரு. சகாய ராஜன் என்பவரின் மகன் **செல்வன் சகாய ரெகின்**, திரு. ஸ்டேன்டர் என்பவரின் மகன் **செல்வன் இன்பென்டர் ரகீட்** மற்றும் திரு. மிக்கேல் நாயகம் என்பவரின் மகன் **செல்வன் சச்சின்** ஆகிய மூன்று சிறுவர்கள் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு, சச்சின் உடல் 16.6.2019 அன்றும், சகாய ரெகின் என்பவரது உடல் 17.6.2019 அன்றும், இன்பென்டர் ரகீட் என்பவரது உடல் 18.6.2019 அன்றும் கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று சிறுவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினரின் வறிய நிலையை கருத்தில் கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**